# மனைப்பிரிவு தொழில்நுட்ப அனுமதி

மனைப்பிரிவு விண்ணப்பங்களை நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் அனுமதி கோரி பெறப்படுபவைகளில் கீழேகண்ட வரைபடங்களும் விபரங்களும் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.

1. ஆணையர்/செயல் அலுவலரின் முகப்புக் கடிதம்
2. பூர்த்தி செய்யப்படட வினாப்படிவம்
3. மனுதாரர் விண்ணப்பம – 3 நகல்கள் (ஒரு நகலில் ரூ.2/– மதிப்புக்கான நீதிமன்ற வில்லை ஒட்டப்பட்டிருக்க வேண்டும்).
4. நில அளவு வரைபட (எப்.எம்.பி) நகல் (சான்றொப்பம் செய்திருத்தல் வேண்டும், (வரைபடங்களில் குறிக்கப்படும் அளவுகள் அனைத்தும் மீட்டரில் அளித்தல் வேண்டும்).
5. மனைப்பிரிவு கோரும் இடம் அனைத்தும் மனுதாரருக்குச் சொந்தமானதென்பதை நிரூபணம் செய்யும் வகையில், சம்பந்தப்பட்ட ஆவணங்களின் நகல் ஒன்று இணைத்தனுப்பப்பட்டிருக்க வேண்டும்.
6. சுற்றுச் சார்பு வரைபடம் (Topo sketch )

   மனுதாரர் மனையின் ஒவ்வொரு பக்க எல்லையிலிருந்தும் அனைத்து முனைகளிலிருந்தும் 100 மீட்டர் சுற்றளவில் உள்ள நில உபயோகங்கள், மின்பாதை, சாலை, இரயில் பாதை, கட்டடம், ஆறு, ஏரி,குளம், மலை, இடுகாடு, சுடுகாடு, கல்லுடைக்கும் இடம், பாறை முதலியவற்றைக் காட்டும் சுற்றுச் சார்பு வரைபடம் 1 செ.மீட்டருக்கு 1600 மீட்டர் (1 அங்குலத்திற்கு 132 அடி) என்ற அளவில் இருத்தல் வேண்டும்.

   வரைபடங்களில் குறிக்கப்படும் அளவுகள் அனைத்தும் மீட்டரில் அளித்தல் வேண்டும்.

   ஒவ்வொரு வரைபடத்திலும் மனுதாரரும் மற்றும் உரிமம் பெற்ற அளவையரும் கையொப்பம் செய்திருத்தல் வேண்டும்.

7. நிலையில் உள்ள சாலைகள் ( Existing roads ) அமைப்பு, அகலம், பராமரிப்புத் துறை, தேசிய நெடுஞ்சாலையா, மாநில நெடுஞ்சாலையா, மேஜர் மாவட்ட சாலையா, இதர மாவட்ட சாலையா, நகராட்சி சாலையா, பேரூராட்சி சாலையா, ஊராட்சி ஒன்றிய சாலையா, ஊராட்சி சாலையா போன்ற விவரம் குறிக்கப்படல் வேண்டும்.

8. மின்பாதை ( L.T/H.T) குறைந்த அழுத்தமா ? உயர்ந்த மின் அழுத்தமா என்ற விபரம் உயர் மின் அழுத்தம் என்றால் அதன் மின் அழுத்தத்தின் அளவு மற்றும் கோபுர கம்பமா ? தனிக்கம்பமா ? என்ற விபரமும், மனையின் அனைத்து எல்லைகளுக்கும் மின்கம்பிகளுக்கும் இடையே உள்ள இடைவெளி, அளவு ஆகியவையும் குறிக்கப்படவேண்டும்.

9. மனைப்பிரிவு வரைபடம் (Layout plan) (அளவுகள் அனைத்தும் மீட்டரில் அளித்தல் வேண்டும்)

மனைப்பிரிவு பரப்பளவு 5 ஏக்கருக்குக் குறைவாக இருந்தால் 1:400 மீட்டர் (1 அங்குலத்திற்கு 33 அடி) என்ற அளவிலும், மனைப்பிரிவ பரப்பளவு 5 ஏக்கருக்கு மேற்பட்டு 25 ஏக்கருக்குள் இருந்தால் 1:800 மீட்டர் (1 அங்குலத்திற்கு 66 அடி) என்ற அளவிலும், மனைப்பிரிவு 25 ஏக்கருக்கு மேல் இருந்தால் 1:1600 மீட்டர் (1 அங்குலத்திற்கு 132 அடி) என்ற அளவிலும் இருத்தல் வேண்டும்.

மனுதாரரும் உரிமம் பெற்ற அளவையாளரும் கையொப்பமிட்டிருக்க வேண்டும்.

10. நகரமைப்பு அலுவலரின் நேராய்வு குறிப்புரை அல்லது செயல் அலுவலரின் நேராய்வு குறிப்புரை.

11. தாசில்தாரரால் வழங்கப்படவேண்டிய சான்றிதழ்கள்:

அ. மனுதாரருக்கு நில உரிமம் சம்பந்தமான சான்றிதழ்

ஆ. நிலச்சீர்திருத்தச் சட்டம் 1961–ன்படி பாதிப்பு உள்ளதா என்கிற சான்றிதழ்

இ. நகர்புற நில உச்ச வரம்பு சட்டம் 1978–ன்படி பாதிப்பு உள்ளதா என்கிற சான்றிதழ்

ஈ. நில ஆர்ஜிதம் சட்டம் 1984–ன் படி நில ஆர்ஜிதம்ஏதும் உள்ளதா என்பதற்கான சான்றிதழ்

உ. அரசு புறம்போக்கு நிலப்பகுதியில் மனுதாரர் இடம் அமைந்துள்ளதா என்பதற்கான சான்றிதழ்.

12. ஆணையர்/செயல் அலுவலரால் வழங்கப்பட வேண்டிய சான்றிதழ்கள்:–

அ) பொது நிறுவன (Public body) நிலப்பகுதியில் மனுதாரர் இடம் அமைகின்றதா என்பதற்கான சான்றிதழ்

ஆ) அரசுச் சார்பு நிறுவன ( Quasi Government) நிலப் பகுதியில் மனுதாரர் இடம் அமைகின்றதா என்பதற்கான சான்றிதழ்

இ) தடை ( BAN ) செய்யப்பட்ட பகுதியில் மனுதாரர் இடம் அமைகின்றதா என்பதற்கான சான்றிதழ்.

ஈ) மனைப்பிரிவு அமையும் இடம் கல் உடைக்கும் ( Quary ) பகுதியை மற்றும் மலைப்பகுதியை ஒட்டி அமைகின்றதா என்பதற்கான சான்றிதழ்.

13. விரிவு அபிவிருத்தி திட்டம்

விரிவு அபிவிருத்தித் திட்டப் பகுதியில் அமைந்தால், திட்டத்தின் தன்மையை அதாவது வரைவு நிலையா அல்லது அங்கீகரிக்கப்பட்டதா என்ற விபரம்.

அ) திட்ட உபயோகத்திற்கு ஏற்ப அமைந்துள்ளதா ? அல்லது மாற்றம் ஏதும் தேவையா ? திட்ட உத்தேசங்களை அனுசரித்துள்ளதா ? அவற்றுக்கு மாற்றம் ஏதும் தேவைப்படுகின்றதா என்கிற விவரங்கள் அனுப்பப்படல் வேண்டும்.

ஆ) மாற்றம் தேவையெனில், வரைபடம், திட்டச்சுருக்க வரைபடம் மற்றும் சுற்றுச் சார்பு வரைபடம், உள்ளூர் திட்டக் குழுமத் தீர்மானம் முதலியன இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.

14. முழுமைத் திட்டம்

முழுமைத் திட்டப் பகுதியில் அமைந்தால் முழுமைத் திட்டத்தின் தற்போதைய நிலை அதாவது வரைவு நிலையா, இணக்கம் அளிக்கப்பட்டதா அல்லது அங்கீகரிக்கப்பட்டதா என்ற விபரம்.

நில ஒதுக்கீட்டிற்கு ஏற்ப உள்ளதா ? மாற்றம் தேவையா ? என்ற விபரம்.

15. குடியிருப்பு பகுதி தொழிற்பகுதி ( Public Health Act )

பொது சுகாதாரச் சட்டத்தின் கீழ் குடியிருப்புப் பகுதியாக அல்லது தொழிற்பகுதியாக அறிவிக்கப்பட்ட பகுதியில் அமைகிறதா என்ற விபரம் குறிக்கப்பட வேண்டும்.

தொழிற்பகுதி எனில் முழுமைத்திட்டம் அல்லது விரிவு அபிவிருத்தித் திட்ட ஒதுக்கீடா அல்லது அரசுஅறிவிப்பு செய்த தொழிற்பகுதியாக என்ற விபரம் குறிக்கப்பட வேண்டும்.

நிலப்பயன் உபயோக மாற்றம் என்றால் உள்ளாட்சித் தீர்மானம்/உள்ளூர் திட்டக் குழுமத் தீர்மானம் இணைக்கப்பட வேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ளவை அடங்கிய விண்ணப்பத்தை, நகர் ஊரமைப்பு இயக்குநருக்கு முகவரியிட்டு சம்பந்தப்பட்ட உள்ளாட்சி மூலமாக உள்ளூர் திட்டக் குழுமம் மூலமாக/புதுநகர் வளர்ச்சிக் குழுமம் முலமாக/நகர் ஊரமைப்பு இயக்குநர் அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும்.

தேவையான விபரங்கள் அனைத்தும் பெறப்பட்டு விதிகளுக்கு உட்பட்டிருந்தால் மனைப்பிரிவுக்கு அனுமதி கோரி பெறப்படும் விண்ணப்பங்கள் நகர் ஊரமைப்புத் துறையில் பரிசீலிக்கப்பட்டு, அனுமதி அளிக்க இத்துறையால் ஏற்றுக் கொள்ளப்பட்டால், நகர் ஊரமைப்புத் துறையில் தொழில்நுட்ப ஒப்புதல் அளிப்பதற்காக அரசாணை எண்.138, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 4.6.04–ன்படி ஒரு மனைக்கு ரூ.300/– வீதம் நன்னிலைத் தொகைச் செலுத்துமாறு மனுதாரருக்கு கடிதம் மூலம் விவரம் தெரிவிக்கப்படும். அக்கடிதம் கிடைக்கப் பெற்றதும், அக்கடிதத்தில் தெரிவித்தவாறு செலுத்தக் கோரும் தொகையை

கணக்குத் தலைப்பு Head of Account

0217 – Urban Development – 03 IDSMT – 800 – Other Receipts – AA AA. Director of Town Planning 1. Collection of Payments for Services rendered (0217-03-800-AA.0102).

என்ற தலைப்பில், தமிழ்நாடு அரசிற்குட்பட்ட ஏதேனும் ஓர் கருவூலத்தில்/பாரத ஸ்டேட் வங்கியில் கட்டி அதன் அசல் செலுத்துச் சீட்டினை 807, அண்ணாசாலை, சென்னை–2 என்ற முகவரியில் உள்ள நகர் ஊரமைப்பு இயக்குநர்/ஆணையர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்க வேண்டும். அசல் செலுத்துச் சீட்டு கிடைக்கப் பெற்றதும் தொழில் நுட்ப அனுமதிக்கான நகர் ஊரமைப்புத் துறையின் உத்தரவு பிறப்பிக்கப்பட்டபின் சம்பந்தப்பட்ட

உள்ளூர் திட்டக்குழுமம்/புதுநகர் வளர்ச்சிக் குழுமம்/உள்ளாட்சி அலுவலகத்திற்கு வரைபடங்களும் இணைப்புகளும் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

மனை உட்பிரிவு அனுமதி/மனை ஒருங்கிணைப்பு அனுமதி/ இட அனுமதி

மனை உட்பிரிவு, மனைகள் ஒருங்கிணைப்பு அல்லது இட அனுமதி கோரி நகர் ஊரமைப்பு இயக்ககத்திற்கு அனுப்பப்படும் விண்ணப்பங்களுடன், கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரைபடங்களையும், விபரங்களையும் இணைத்து, நகர் ஊரமைப்பு இயக்குநர், 807 அண்ணா சாலை, சென்னை 600 002 என்ற முகவரியிட்டு சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அலுவலகம், உள்ளூர் திட்டக் குழும அலுவலகம்/புதுநகர் வளர்ச்சிக் குழும அலுவலகம் மூலமாக பெறப்படவேண்டும்.

மனுதாரரால் கொடுக்கப்பட வேண்டிய இணைப்புகள்

1. மனை உட்பிரிவுக்கா, மனைகள் ஒருங்கிணைப்புக்கா அல்லது மனை உட்பிரிவு/மனைகள் ஒருங்கிணைப்புடன் பாதிக்கும் கட்டட விதிகளுக்கு விதிவிலக்கா, மனைப்பிரிவு நிபந்தனைகள் அல்லது திட்ட விதிகளைத் தளர்த்த அனுமதியா ? என்ற தெளிவான விபரத்துடன் மனுதாரர் கையொப்பமிட்ட விண்ணப்பம் 3 நகல்கள்

2. மனைப்படம் (site plan )

(வரைபடங்கள் 1:400 மீட்டர் அளவிலும், அளவுகள் அனைத்தும் மீட்டரிலும் அளித்தல் வேண்டும்)

மனையின் நீள அகல அளவுகளைத தெளிவாகக் குறித்து, மனையின் எல்லைகளை தனி வண்ணமிட்டு காண்பித்து, மனைக்கு அணுகுவழியாக அமையும் சாலை/தெரு ஆகியவைகளை அகல மற்றும் நீள அளவுகளுடன் காட்டும் வரைபடங்கள்3 நகல்.

அணுகு சாலையின் தரம் மற்றும் பராமரிப்பு குறித்த விவரங்கள் தெரிவிக்கப்பட்டிருக்க வேண்டும். மனையின் மொத்த பரப்பளவு அதில் அடங்குகின்ற அளவை எண்கள், அதில் உட்பிரிவு கோரப்படுகின்ற மனையின் பரப்பளவு மற்றும் சரியான அளவுகளுடன் கூடிய வரைபடங்கள் அனுப்பப்படல் வேண்டும்.

3. சுற்றுச் சார்பு வரைபடம்

(வரைபடங்கள் 1:1600 மீட்டர் அளவிலும், அளவுகள் அனைத்தும் மீட்டரில் அளித்தல் வேண்டும்).

மனுதாரர் மனையின் ஒவ்வொரு பக்க எல்லையிலிருந்தும் 100 மீட்டர் சுற்றளவில் உள்ள நில உபயோகங்கள், மின்பாதை, சாலை, இரயில் பாதை, கட்டடம், ஆறு, ஏரி, குளம், மலை, இடுகாடு, சுடுகாடு முதலியவைகளைக் காட்டும் சுற்றுச் சார்பு வரைபடம் – 3 நகல்கள்.

அனைத்து வரைபடங்களிலும் மனுதாரரும், உரிமம் பெற்ற அளவையாளரும் கையொப்பம் செய்திருத்தல் வேண்டும்.

4. மனுதாரருக்கு நில உரிமைச் சம்பந்தமான பத்திர நகல் ஒன்று.

5. மனைப்பிரிவுப் பகுதிக்கு 13 ஆண்டுகளுக்கான வில்லங்கச் சான்று.

6. விதிகள் பாதிப்புடன் உள்ள கட்டடத்திற்கும் சேர்த்து மனை உட்பிரிவு/ மனைகள் ஒருங்கிணைப்பு அனுமதி கோருவதாக இருந்தால் அதற்கான கட்டட வரைபடமும் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

7. மனை உட்பிரிவு அல்லது மனைகள் ஒருங்கிணைப்பு கோரும் இடம் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் அமைந்தால் மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்புத் துறையில் ஏற்கெனவே ஒப்புதல் அளிக்கப்பட்ட கோப்பு எண் மனைப்பிரிவு எண் நாள் விவரம்.

8. மனை விரிவு அபிவிருத்தித் திட்டப் பகுதியில் முழுமைத் திட்டப் பகுதியில் அமைந்தால் அத்திட்டத்தின் திட்ட சுருக்க நகல்.

9. உள்ளாட்சி அதிகாரியால் இணைத்து அனுப்பப்பட வேண்டியவை

அ) செயல் அலுவலர்/ஆணையரின் முகப்புக் கடிதம்

ஆ) நில உரிமைக் குறித்து செயல் அலுவலரின்/ஆணையரின் சான்றிதழ்

இ) முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்ட வினாவிடைப் படிவம்

ஈ) நகரமைப்பு அலுவலரின்/செயல் அலுவலரின் நேராய்வுக் குறிப்பு

உ) மனுதாரரால் கொடுக்கப்படட அனைத்து இணைப்புகள்.

மலை இடங்களில் மனை அமைந்தால் கீழேகண்ட விவரங்களையும் வரைபடங்களையம் இணைத்து அனுப்ப வேண்டும்.

10. கிரேடியன்ட் விவரங்கள் ( Gradient of the site ) அடங்கிய மனைப்படம்.

11. Geologically weak zone notified by collector-details

12. மனையின் அகலமும் பரப்பும் தமிழ்நாடு நராட்சிகள் சட்ட மனையிடங்களுக்கான கட்டட விதிகள் 1993–ஐ நிறைவு செய்கிறதா என்ற விவரம்

மனை உட்பிரிவுக்கோ, மனை ஒருங்கிணைப்பிற்கோ அல்லது கட்டட மேன்முறையீட்டு விண்ணப்பததுடனோ அனுமதி கோரி பெறப்படும் விண்ணப்பங்கள் இவ்வலுவலகத்தில் பரிசீலிக்கப்பட்டு, உட்பிரிவிற்கோ அல்லது ஒருங்கிணைப்பிற்கோ அனுமதி அளிக்க இத்துறையால் ஏற்றுக் கொள்ளப்பட்டால், நகர் ஊரமைப்புத துறையின் தொழில்நுட்ப ஒப்புதல் அளிப்பதற்காக, அரசாணை எண்.138 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 4.3.04–ன்படி ஒரு மனைக்கு ரூ.300/– வீதம் நன்னிலைத் தொகைச் செலுத்துமாறு மனுதாரருக்குக் கடிதம் மூலம் விவரம் தெரிவிக்க வேண்டும். அக்கடிதம் கிடைக்கப் பெற்றதும், அக்கடிதத்தில் தெரிவித்தவாறு செலுத்தக்கோரும் தொகையை மனுதாரர் கீழேகண்ட தலைப்பில் செலுத்தியுள்ளாரா என்பதைப் பரிசீலிக்க வேண்டும்.

கணக்குத் தலைப்பு Head of Account

0217 – Urban Development – 03 IDSMT – 800 Other Receipts – AA. Director of Town Planning. 1. Collection of Payments for services rendered (0217-03-800-AA.0102)

என்ற தலைப்பில் தமிழ்நாடு அரசிற்குட்பட்ட ஏதேனும் ஒரு கருவூலத்தில்/பாரத ஸ்டேட் வங்கியில் கட்டி அதன் அசல் செலுத்துச் சீட்டினை 807. அண்ணா சாலை, சென்னை–2 என்ற முகவரியில் உள்ள நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களுக்குஅனுப்பி வைக்கப்பட்டிருக்க வேண்டும். அசல் செலுத்துச் சீட்டு கிடைக்கப் பெற்றதும் தொழில்நுட்ப அனுமதிக்கான நகர் ஊரமைப்புத் துறையின் உத்தரவு பிறப்பிக்கப்பட்டபின் சம்பந்தப்பட்ட உள்ளூர் திட்டக்குழுமம்/புதுநகர் வளாச்சிக்குழுமம்/உள்ளாட்சி அலுவலகத்திற்கு வரைபடங்களும் இணைப்புகளும் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

மனை உட்பிரிவு அனுமதி/மனை ஒருங்கிணைப்பு/மனை அனுமதி படிவம்.

நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களுக்கு அனுப்பப்படும் மனை உட்பிரிவு அனுமதி/மனைஅனுமதி/மனைகள் ஒருங்கிணைப்பு அனுமதி சம்பந்தமான விண்ணப்பத்துடன் பெறப்படவேண்டிய விவரங்கள்

| | | |
|---|---|---|
| 1. உள்ளாட்சியின் பெயர் | | |
| உள்ளூர் திட்டக் குழுமத்தின் பெயர் | | |
| 2. உள்ளாட்சியில் விண்ணப்பம் பெறப்பட்ட நாள் | | |
| 3. மனுதாரரின் பெயரும் முகவரியும் | | |
| 4. மனுதாரர் விண்ணப்பத்தில் ரூ.2–க்கான நீதிமன்ற வில்லை ஒட்டப்பட்டுள்ளதா ? | | |
| 5. மனுதாரர் மனை அமையும் | | |
| (அ) கிராமத்தின் பெயர் | | |
| (ஆ) வார்டு எண் பிளாக் எண் | | |
| (இ) நகரளவு எண்/நில அளவு எண் | | |
| 6. இடத்திற்கு மனுதாரர் எவ்வாறு உரிமையாளர் | | |
| பூர்வீக சொத்தா/பாகப்பிரிவினை மூலமாகவா/கிரயப் பத்திர முலமாகவா ? | | |
| 7. ஆவணங்கள் & சான்றிதழ்கள் | | |
| (அ) நில அளவு புத்தக வரைபட நகல் ( F.M.B.Sketch ) | | |
| (ஆ) சிட்டா & அடங்கல் | | |
| (இ) பத்திர நகல் (சான்றளிக்கப்பட்டிருக்க வேண்டும்) | | |
| (ஈ) வில்லங்கச் சான்று | | |

| | | |
|---|---|---|
| (உ) உள்ளாட்சி அதிகாரியால் அளிக்கப்படவேண்டிய 9 சான்றுகள் | | |
| 8 (அ) மனையின் பரப்பளவு | | |
| (ஆ) மனையின் குறைந்தபட்ச அகலம் | | |
| (இ) மனையின் குறைந்தபட்ச நீளம் | | |
| 9. (அ) உத்தேச மனை உட்பிரிவா ? அல்லது | | |
| (ஆ) ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு மனையில் உட்பிரிவா ? அல்லது மனைகள் ஒருங்கிணைப்பா ? ஆம் எனில் | | |
| (இ) நகர் ஊரமைப்பு இயக்குநரின் ஒப்புதல் கடித எண் மற்றும் நாள் | | |
| (ஈ) வரைபட எண் | | |
| (உ) இடம், அனுமதியற்ற மனைப்பிரிவில் ஒரு மனையாக அமைகிறதா | | |
| (ஊ) மனை உட்பிரிவு செய்வதற்கான காரணம் என்ன | | |
| (எ) மனையில் என்ன உபயோகத்திற்கான கட்டடம் கட்டப்பட உள்ளது | | |
| (ஏ) மனைக்கு அருகில் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு ஏதேனும் உள்ளதா ? | | |
| 10. சுற்றுச் சார்பு வரைபடம் ( TOPO SKETCH) | | |
| மனுதாரர் மனையின் ஒவ்வொரு பக்க எல்லையிலிருந்தும் 90 மீ சுற்றளவிற்குள் கீழ்கண்டவைகள் இருப்பின் அவை வரைபடத்தில் குறிக்கப்பட்டுள்ளனவா ? | | |
| (அ) கட்டடங்களின் இருப்பிடம் & உபயோகம், சாலைகள், நில உபயோகங்கள் | | |
| (ஆ) சுடுகாடு, இடுகாடு | | |
| (இ) இருப்புப்பாதை | | |

| | | |
|---|---|---|
| (ஈ) குளம்,ஏரி, ஓடை, வாய்க்கால் மற்றும் ஆறு போன்ற நீர்நிலைகள் | | |
| (உ) உயர்ந்த/குறைந்த அழுத்த மின் கம்பிப் பாதை | | |
| (ஊ) விமான தளம்/கனிம சுரங்கங்கள்/கல் தோண்டும் இடங்கள் | | |
| (எ) தடை செய்யப்பட்ட பகுதி | | |
| (ஏ) மனை கடற்கரையிலிருந்து 500 மீ தூரத்திற்குள் அமைகிறதா ? | | |
| (ஐ) இடம் அறிவிக்கப்பட்ட தொழிற்பகுதியில்/ குடியிருப்புப் பகுதியில்/குடியிருப்பு அல்லாத பகுதியில் அமைகிறதா ? | | |
| 11. அணுகு பாதை பற்றிய விவரங்கள் | | |
| அ. அணுகுபாதையின் பெயர் | | |
| ஆ. அணுகுபாதை யாரால் பராமரிக்கப்படுகிறது | | |
| இ. அணுகு பாதையின் அகலம் நீளம் | | |
| ஈ. அணுகு பாதையின் தன்மை (தார்சாலை/சரளை சாலை/மண் சாலை) | | |
| உ. அணுகுபாதை தனியார் பாதை என்றால் அதை உபயோகிக்க மனுதாரருக்கு உரிமையுண்டா ? | | |
| ஊ. அணுகுபாதை ஏற்கனவே உள்ளதா/உத்தேசிக்கப்பட்டுள்ளதா ? | | |
| 12. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920–ன் அத்தியாயம் IX, X, XA விஸ்தரிப்பு செய்யப்பட்டுள்ளதா ? | | |
| 13. விரிவு அபிவிருத்தித் திட்டம் ( D.D.PLAN ) | | |
| அ. இடம் திட்டப் பகுதியில் அமைகிறதா ஆம் எனில் | | |

| | | |
|---|---|---|
| ஆ. திட்டத்தின் பெயர் | | |
| இ. திட்டத்தின் தற்போதைய நிலை | | |
| ஈ. திட்டத்தில் மனுதாரர் இடம் எந்த உபயோகத்தில் அமைகிறது | | |
| உ. திட்ட சாலையையோ அல்லது திட்ட ஒதுக்கீட்டையோ பாதிக்கின்றதா ? | | |
| ஊ. திட்ட சுருக்க வரைபடத்தில் மனுதாரரின் மனையை தனி வண்ணத்தில் காட்டப்பட்டு, இணைக்கப்பட்டுள்ளதா ? | | |
| 14. முழுமைத் திட்டம் ( MASTER PLAN) | | |
| அ. இடம் முழுமைத் திட்டப் பகுதியில் அமைகிறதா ? ஆம் எனில் | | |
| ஆ. முழுமைத் திட்டத்தின் தற்போதைய நிலை | | |
| இ. மனுதாரர் இடம் எந்த நில உபயோகத்தில் அமைகிறது | | |
| ஈ. முழுமைத் திட்ட சுருக்க வரைபட நகல் இணைக்கப்பட்டுள்ளதா ? | | |
| உ. நில உபயோகத்தை பாதிக்கும் வகையில் மனுதாரர் உத்தேசம் அமைந்துள்ளதா ? | | |
| 15. வரைபடங்கள் | | |
| அ. சுற்றுச்சார்பு வரைபடம் 3 நகல்கள்<br>ஆ. மனைப்படம் 3 நகல்கள் | | |
| இ. வரைபடங்கள் சரிபார்க்கப்பட்டு விவரங்கள் அளவுகள் சரியாகக் குறிக்கப்பட்டுள்ளது என்று ஒவ்வொரு வரைபடத்திலும் உள்ளாட்சி அதிகாரியால் சான்றளிக்கப்பட்டுள்ளதா ? | | |
| 16. உள்ளாட்சி அதிகாரியின்/நகரமைப்பு அலுவலரின் குறிப்பு | | |

ஆணையர்/செயல் அலுவலர்

கட்டட மேல்முறையீடு

கட்டட விதி பாதிப்பிற்கான விதிவிலக்கிற்கும், மனைப்பிரிவு நிபந்தனை பாதிப்பு மற்றும் திட்ட விதி பாதிப்பு ஆகியவைகளின் இசைவிற்குமான கட்டட மேல்முறையீட்டு விண்ணப்பங்களை நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின்/அரசின் அனுமதி கோரி அனுப்பப்படும்போது கீழேகண்ட விபரங்களும், இணைப்புகளும் இணைத்து அனுப்பபட்டுள்ளதா என்பதை பரிசீலித்து குறிப்பு வழங்க வேண்டும்.

1. ஆணையாளர்/நிர்வாக அலுவலரின் கடிதம்
2. மனுதாரர் விண்ணப்பம் (இரண்டு ரூபாய் நீதிமன்ற வில்லையுடன்)
3. மேல்முறையீட்டு வரைபடம்.

மேல்முறையீட்டு வரைபடங்களில்

| | |
|---|---|
| இவ்வலுவலகக் கோப்பு எண்......... நாள் மூலம் நகர் ஊரமைப்பு இயக்குநருக்கு/அரசுக்கு முகவரியிட்டு இத்துடன் இணைத்து அனுப்பப்படும் மேல்முறையீட்டு வரைபடங்களில் குறிக்கப்பட்டுள்ள விபரங்கள் அனைத்தும் சரியானவை எனச் சான்றளிக்கின்றேன்.<br><br>ஒப்பம்.......<br>ஆணையாளர்/நிர்வாக அதிகாரி | "The particulars furnished in the appeal plan are found to be correct. This plan is enclosed with the Lr. No........................ dated ............................ addressed to D.T.C.P./Govenrnment"<br><br>sd/-<br>Executive Authority |

*"என்று ஆணையாளரால் அல்லது நகரமைப்பு அலுவலரால்/நிர்வாக அலுவலரால் சான்றளிக்கப்பட்டிருக்க வேண்டும்.*

4. nkšKiwp£L édh éil¥ got«.

5. என்னென்ன விதிகள் பாதிக்கின்றன என்பதை விவரிக்கும் கீழேகண்டவாரான விதி பாதிப்பு அட்டவணை

| விதி எண் | விதி விபரம் தேவை | | உள்ளது | குறைவு | விழுக்காடு |
|---|---|---|---|---|---|
| 1 2 3 4 5 6 | | | | | |

அ. தமிழ்நாடு மாவட்ட நகராடசிகள் கட்டட விதிகள், 1972

ஆ. திட்ட விதிகள்:

இ. மனைப்பிரிவு நிபந்தனைகள்:

ஈ. பலமாடி மற்றும் பொதுக் கட்டட விதிகள், 1973

ஊ. வளர்ச்சிக் கட்டுப்பட்டு விதிகள்

ஊ. துணை கட்டட விதிகள்

(ஊராட்சி கட்டட விதிகள் 1970, புயல் பாதிக்கும் பகுதி கட்டட விதிகள், 1982 போன்றவைகள்)
அதில் ஆணையாளர் அல்லது நகரமைப்பு அலுவலர், நிர்வாக அலுவலர் கையொப்பமிட்டிருக்க வேண்டும்.

6. மனைக்கு அணுகு பாதையாக உள்ள சாலை தெரு யாரால் பராமரிக்கப்படுகிறது.

பாதையின் அகலம், பாதை மண் பாதையா, கப்பி சாலையா, தார் சாலையா போன்ற விவரம்

7. கட்டட ஆய்வர் மற்றும் நகரமைப்பு அலுவலர் நேராய்வு குறிப்பு (அரசுக்கு மேல்முறையீடு என்றால் ஆணையாளரின் நேராய்வு குறிப்பும் சேர்த்து)

8. கட்டட அனுமதி மாநகராட்சியில், நகராட்சியில்/பேருராட்சியில்/நகரியத்தில் மறுக்கப்பட்ட வரைபடம் மற்றும் உத்தரவின் நகல்.

9. விதிவிலக்கிற்கு ஏற்கனவே இயக்குநரால், அரசால் மறுக்கப்பபடடிருந்தால்/விபரம் கோரப்பட்டிருந்தால் அந்த உத்தரவின் எண் நாள் விபரம்

10. மனுதாரரின் கட்டடம் அமையும் இடம் முழுமைத் திட்டப் பகுதியில் அமைந்தால், முழுமைத் திட்டத்தில் உள்ள நில உபயோகங்களைக் காட்டும் முழுமைத் திட்ட சுருக்க வரைபட நகல். மனுதாரர் இடம் எந்த நில அளவு எண்ணில் அமைகிறது என்பதையும் அதன் உட்பிரிவு எண்கள் விபரத்தினையும் முழுமைத் திட்டத்தில் உத்தேச நில உபயோக விபரத்தினையும் விபரமாகத் தெரிவிக்க வேண்டும்.

11. மனுதாரரின் கட்டடம் அமையும் இடம் விரிவு அபிவிருத்தித் திட்டப் பகுதியில் அமைந்தால் மனுதாரரின் மனையினை தனி வண்ணமிட்டு காட்டும் விரிவு அபிவிருத்தித் திட்ட சுருக்க வரைபட நகல். விரிவு அபிவிருத்தி திட்டத்தில் மனுதாரர் இடம் என்ன நில உபயோகததில் உள்ளது என்ற விபரம்.

12. மனுதாரரின் கட்டடம் அமையும் இடம் உள்ளூர் திட்டக் குழும எல்லையில் அமைந்தால் உள்ளூர் திட்டக் குழுமத் தீர்மான நகல்

13. சம்பந்தப்பட்ட நகரவைக் கோப்பு/பேரூராட்சி கோப்பு/நகரியக் கோப்பு

14/ மனைக்கு/மனை உட்பிரிவுக்கு அனுமதி கோரப்படும்போது, மனை அமையும் இடம் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவா ? அங்கிகரிக்கப்படாத மனைப்பிரிவா ? நத்தமா ? தனிமனையா ? என்பதற்கும் ? இடம் நன்செய்நிலமா என்பதற்கும் தெளிவான விபரம் அளித்தல் வேண்டும்.

15. மனை உட்பிரிவு மற்றும் மனை ஒருங்கிணைப்பு சம்பந்தமான திட்ட விதி அல்லது மனைப்பிரிவு நிபந்தனை பாதிப்பு இருந்தால், மனுதாரர் தனது விண்ணப்பத்திலும், ஆணையாளர் தனது கடிதத்திலும் விபரம் தெரிவித்து அதற்கும் அனுமதி கோர வேண்டும். மனுதாரர் கட்டட விண்ணப்பததுடன் மனை ஒப்புதலுக்கும்/மனை உட்பிரிவுக்கும்/மனை ஒருங்கிணைப்புக்கும் சேர்த்து விண்ணப்பிக்கும்பொழுது மனை ஒப்புதலுக்காக/மனை உட்பிரிவுக்காக/மனை ஒருங்கிணைப்புக்காக தனியாக வரைபடங்கள் மற்றும் விபரங்கள் கட்டட விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.

16. மேல்முறையீடு நகர் ஊரமைப்பு இயக்குநருக்கு முகவரியிடப்பட்டிருந்தால் நகரவை கோப்புடன், வரைபடங்கள், இணைப்புகள் ஒவ்வொன்றிலும் குறைந்தது 3 நகல்களும், மேல்முறையீடு அரசுக்கு முகவரியிடப்பட்டிருந்தால், நகரவைக் கோப்புடன் வரைபடங்கள் இணைப்புகள் ஒவ்வொன்றிலும் குறைந்தது 6 நகல்களும் இணைத்து அனுப்ப வேண்டும்.
(மேலே கண்ட இணைப்புகள் அனைத்தையும் ஒரு கட்டாக தைத்தும், சம்பந்தப்பட்ட நகரவைக் கோப்பை ஒரு கட்டாகவும் தைத்து பின் இரண்டையும் ஒன்றாக வைத்து தைத்து அனுப்பினால் இணைப்புகளைப் பிரித்தெடுக்க வசதியாக அமையும்)

17. மேலே கண்டவைகள் அடங்கிய விண்ணப்பம் நகர் ஊரமைப்பு இயக்குநர், 807, அண்ணா சாலை, சென்னை – 600 002 என முகவரியிடப்பட்டு சம்பந்தப்பட்ட உள்ளாட்சி/உள்ளூர் திட்டக் குழுமம்/புதுநகர் வளர்ச்சிக் குழுமம் மூலமாக அனுப்ப வேண்டும். மேல்முறையீடு அரசுக்கு என்றால் அரசு செயலாளர், நகராட்சி நிர்வாகம் குடிநீர் வழங்கு துறை சென்னை 9 என முகவரியிட்டு வழி நகர் ஊரமைப்பு இயக்குநர் எனக் குறிப்பிட்டு சம்பந்தப்பட்ட உள்ளாட்சி/உள்ளூர் திட்டக் குழுமம்/புதுநகர்

வளர்ச்சிக் குழுமம் மூலமாக அனுப்ப வேண்டும்.

மனைப்பிரிவு விண்ணப்பத்துடன் நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களுக்கு

இணைத்தனுப்பப்பட வேண்டிய வினா / விடைப் படிவம் (உள்ளாட்சியினால் நிரப்பப்பட வேண்டியது)

| | | | |
|---|---|---|---|
| 1 | | உள்ளாட்சியின் பெயர் (அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்) | |
| 2 | | உள்ளாட்சியில் விண்ணப்பம் பெறப்பட்ட நாள் | |
| 3 | | உள்ளூர் திட்டக்குழுமத்தின் பெயர் | |
| 4 | | மனுதாரரின் பெயரும், கடித போக்குவரத்து முகவரியும் (அஞ்சல் குறியீட்டு என்னுடன்) | |
| 5 | | மனைப் பிரிவு ( தனியார், வீட்டுவசதி வாரியம், கூட்டுறவு சங்கம், இதர) | |
| 6 | | மனுதாரர் மனைப்பிரிவு இடத்திற்கு உரிமம் குறித்த விபரம் | |
| | அ | பூர்விகம், பாகப்பிரிவினை, கிரயப் பத்திரம் மூலம் உரிமையாளரா ? | |
| | ஆ | கிரய ஒப்பந்தப் பத்திரத்தின் மூலம் உரிமையாளரா ? | |
| | இ | அதிகாரம் பெற்ற பிரதிநிதியா ? | |
| 7 | | மனைப்பிரிவு இடத்தின் விபரங்கள் | |
| | ஆ | ந.அ.எண். (அல்லது) நிலஅளவை எண் | |
| | ஆ | பிளாக் எண் / வார்டு எண் | |
| | இ | தலை கிராமத்தின் பெயர் | |
| 8 | அ | மனைப்பிரிவு இடத்தின் மொத்தப் | |

| | | | |
|---|---|---|---|
| | | பரப்பு | |
| ஆ | | தேவைப்படும் மனைகளின் எண்ணிக்கை | |
| இ | | தேவைப்படும் மனைகளின் அளவுகள்<br>1. குறைந்த அளவு அகலம்<br>2.அதிகபட்ச அளவு அகலம்<br>3.குறைந்த அளவு பரப்பளவு<br>4.அதிக அளவு பரப்பளவு | |
| ஈ | | மனைப்பிரிவில் ஏற்கனவே மனைகள் விற்கப் பட்டுள்ளனவா ? | |
| 1 | | ஆம், எனில், விற்கப்பட்ட மகைளின் இருப்பிடத்தைத் தனி வண்ணமிட்டு காண்பிக்கவும், அம் மனைகளுக்கு உண்டான கிரயப்பத்திரம் நகல்கள் இணைக்கப்பட வேண்டும் | |
| | 2 | மனையில் கட்டம் ஏதும் நிலையில் உள்ளதா ? இருப்பின் கட்டங்கள் உள்ள மனைகளை தனி வண்ணமிட்டு காண்பிக்கப்பட வேண்டும் | |
| 9 | | மனைப்பிரிவு புதிய முன்மொழிவுகளா ? அல்லது ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் பகுதி, மொத்த திருத்தமா ? திருத்த மனைப்பிரிவாக இருப்பின் ஏற்கனவே நகர் ஊரமைப்பு துறையில் அளிக்கப்பட்ட கடித எண்ணும் வரைபட எண்ணும் திருத்தம் கோருவதற்கான | (அமைகிறது / அமையவில்லை / குறிக்கப்பட்டுள்ளது / குறிக்கப்படவில்லை என்ற விபரங்களைத் தவறாது குறிப்பிட வேண்டும்.) |

| | | | |
|---|---|---|---|
| | | விரிவான காரணமும் குறிப்பிடப்பட வேண்டும். சுற்றுச்சார்பு ( TOPO SKETCH) வரைபடம் வரைபடத்தில் மனைப்பிரிவு இடத்தில் நாற்புற எல்லைகளில் இருந்தும் 90 மீ (300 அடி) சுற்றளவிற்குள் கீழ்கண்டவை இருப்பின் அவை குறிக்கப்பட்டு தூர அளவு குறிக்கப்பட்டு காட்டப் பட்டு உள்ளனவா எனக் குறிப்பிடப்பட வேண்டும் | |
| 10 | அ | பிரதான கட்டடங்கள் அவைகளின் உபயோகங்கள் மற்றும் பிரதான நில உபயோகங்கள் (நன்செய், புன்செய் உபயோகம் உள்பட) | |
| | ஆ | சுடுகாடு / இடுகாடு | |
| | இ | இருப்புப்பாதை | |
| | ஈ | ஏரி, குளம், ஒடை, வாய்க்கால் மற்றும் ஆறு போன்ற நீர் நிலைகள் | |
| | உ | உயர்ந்த, குறைந்த அழுத்த மின் கம்பிப்பாதை,தந்தி கம்பிபாதை | |
| | ஊ | தடை செய்யப்பட்ட பகுதி | |
| | எ | விமான தளம் மற்றும் ஒடு பாதை | |
| | ஏ | புராதன சின்னம் பகுதி என அறிவிக்கப்பட்ட பகுதி | |
| | ஐ | கனிம சுரங்கங்கள் மற்றும் கல்தோண்டும் இடம் | |

| | | | |
|---|---|---|---|
| | ஒ | கடற்கரையிலிருந்து 200 மீ, 500 மீ தூர இடைவெளியில் மனை அமைதல் | |
| | ஓ | நகர குடிநீர் உபயோக –த்திற்கென உள்ள ஆழ்குழாய் கிணறு | |
| | ஔ | நிலையிலுள்ள அனைத்து இதர விபரங்கள் | |
| 11 | | மனைப் பிரிவு இடம் அமைந்துள்ள பகுதி விரிவு அபிவிருத்தி திட்டம் மற்றும் முழுமைத்திட்டம் ஆகியவற்றில் குடியிருப்பு மற்றும் தொழிற் பகுதியாக அறிவிக்கப் பட்டுள்ளதைத் தவிர்த்து வேறு பிரகடனப் படுத்தப்பட்ட குடியிருப்பு பகுதியில் அல்லது தொழிற் பகுதியில் அமைகிறதா ? | |
| 12 | | மனைப்பிரிவு இடத்திற்கான அனுகு பாதை பற்றிய விபரங்கள் | |
| | அ | அணுகு பாதையின் பெயர் | |
| | ஆ | அணுகு பாதையின் அகலம் | |
| | இ | அணுகு பாதையின் தன்மை (தார், சரளை, மண்) | |
| | ஈ | அணுகுபாதை எந்த பிரதான சாலையிலிருந்து பிரிந்து செல்கிறது ? | |
| | உ | அணுகு பாதையின் நீளம் | |
| | ஊ | அணுகு பாதையின் வகை மற்றும் பராமரிப்பு | |
| | 1 | ஊராட்சி சாலை | |
| | 2 | ஊராட்சி ஒன்றிய சாலை | |

| | | | |
|---|---|---|---|
| | 3 | பேரூராட்சி சாலை | |
| | 4 | மாநகராட்சி சாலை, நகராட்சி சாலை | |
| | 5 | நெடுஞ்சாலை | |
| | 6 | தேசிய நெடுஞ்சாலை | |
| | 7 | புறவழிச்சாலை | |
| | 8 | மனைப்பிரிவு சாலை | |
| | 9 | அங்கீகரிக்கப்பட்ட புறம்போக்கு சாலை | |
| | 10 | தனியார் சாலை, பாதை | |
| 13 | | இம்மனைப்பிரிவு இடத்தினைச் சுற்றிலும் 200 மீ (600 அடி) தூரத்திற்குள் நகர் ஊரமைப்பு துறையால் ஏற்கனவே ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு ஏதேனும் உள்ளதா ? ஆம் எனில், அம்மனைக்கு நகர் ஊரமைப்பு துறையால் அளிக்கப்பட்ட ஒப்புதல் எண் நகர் ஊரமைப்பு துறையின் கடித எண் மற்றும் அம்மனைப்பிரிவு இடத்தில் முகவரி தருக | |
| 14 | | இம்மனைப்பிரிவு இடம் அமைந்துள்ள உள்ளாட்சியில் கீழ்க்காணும் சட்டங்கள் அமுலாக்கப்பட்டுள்ளனவா ? என்பதையும் பாதிப்பு உள்ளனவா என்பதையும் குறிப்பிடவும் | |
| | அ | மாநகராட்சிகளின் சட்டம் | |

| | | | |
|---|---|---|---|
| | ஆ | 1920–ம் ஆண்டின் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டத்தின் அத்தியாயங்கள் IX & X மற்றும் விஸ்தரிப்பு செய்யப்பட்டுள்ளதா ? இடம் மலை இடத்தில் அமைந்தால் நகராட்சி சட்ட அத்தியாயம் IX & X & XA விரிவாகக்கப்பட்டுள்ளதா ? | |
| | இ | 1920–ம் ஆண்டின் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் | |
| | ஈ | 1997–ம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் | |
| | உ | அரசாணை எண். 44 P & D நாள் 2.4.92 –ன் படி மனுதாரர் இடம் மலைப்பகுதிக்குள் அமைகிறதா ? | |
| 15 | | இம்மனைப்பிரிவு இடம் விரிவு அபிவிருத்தி திட்டப்பகுதியில் அமைகிறதா ? ஆம் எனில் | |
| | அ | விரிவு அபிவிருத்தித் திட்டத்தின் பெயர் | |
| | ஆ | திட்டத்திற்கு நகர் ஊரமைப்பு இயக்குநரின் இணக்கம் அளிக்கப்பட்டுள்ளதா ? இருப்பின் விபரம் குறிப்பிட வேண்டும் | |
| | இ | திட்டத்திற்கு அரசால் / இயக்குநரால் இறுதி அங்கீகாரம் அளிக்கப் பட்டுள்ளதா ? இருப்பின் விபரம் குறிப்பிட வேண்டும் | |

| | | | |
|---|---|---|---|
| | ஈ | இடத்தில் மனுதாரர் இடம் எந்த நில உபயோகத்தில் அமைகிறது ? | |
| | உ | திட்ட நில உபயோகத்திற்கு ஏற்ப மனுதாரரின் உத்தேச நிலப்பயன் உள்ளதா ? | |
| 16 | | இம்மனைப்பிரிவு அமையும் உள்ளாட்சியில் முழுமைத் திட்டம் அமுலில் உள்ளதா ஆம் எனில் | |
| | அ | முழுமைத்திட்டம் அரசின் இணக்கம் / ஒப்புதல் அளிக்கப்பட்டதா ? இருப்பின் விபரம் குறிப்பு வேண்டும் | |
| | ஆ | முழுமைத்திட்டத்தில் மனுதாரர் இடம் எந்த நில உபயோகத்தில் அமைகிறது ? | |
| | இ | முழுமைத்திட்ட நில உபயோகத்திற்கு ஏற்ப மனுதாரரின் உத்தேச நில பயன் அமைகிறதா ? | |
| 17 | | இம்மனைப்பிரிவு அமையும் இடத்தில் / இடத்திற்கு அருகில் கீழ்க்கண்ட உத்தேசங்கள் இருப்பின் அவற்றின் நில அளவு எண் விஸ்தீரணம் முகவரி ஆகியவற்றைக் குறிப்பிடவும் | |
| | அ | பிரகனப்படுத்தப்பட்ட தொழிற் பகுதி உள்ளதா ? | |
| | ஆ | தொழிற்பகுதி பிரகடனத்துக்காக உத்தேசிக்கப்பட்டுள்ளதா ? | |
| | இ | தொழிற்பகுதிக்கு நிலம் கையகப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதா ? | |
| 18 | | தடைசெய்யப்பட்ட பகுதி | |

| | | | |
|---|---|---|---|
| | அ | இடம் தடைசெய்யப்பட்ட பகுதியில் அமைகிறதா ? | |
| | ஆ | இடம் நன்செய் நிலப்பகுதியில் அமைகிறதா ? | |
| | இ | இடம் கடற்கரை எல்லையி லிருந்து 200 மீ / 500 மீ இடைவெளிக்குள் அமைகிறதா ? | |
| | ஈ | இடம் புராதனச் சின்னம் பகுதி என அறிவிக்கப்பட்ட பகுதியில் அமைகிறதா ? | |
| | உள | 90 மீட்டருக்குள் குப்பை கொட்டும் இடம் உள்ளதா ? | |
| 19 | | மனைப்பிரிவு ஒதுக்கீடு மாற்றம் குறித்து புகாரோ அல்லது நீதிமன்றத்தில் வழக்கோ உள்ளதா ? இருப்பின் விபரம் குறிப்பிடப்பட வேண்டும் | |
| 20 | | மிக அவசியம் கீழே கண்டவை இணைக்கப்பட்டுள்ளனவா என்பதை தவறாது சரி பார்க்க வேண்டும் | (இணைக்கப்பட்டுள்ளது அல்லது இணைக்கப்பட வில்லை என்பதைத் தவறாது குறிப்பிட வேண்டும்) |
| | 1 | மனுதாரரின் விண்ணப்பம் ரூ.2/– நீதிமன்ற வில்லை ஒட்டப்பட்டதுடன் இணைக்கப்பட்டு உள்ளதா ? | |
| | 2 | மனுதாரருக்கும் மனைப் பிரிவிற்கும் உள்ள சம்பந்தத்தைக் காட்டும் அத்தாட்சிகள் (பத்திரம்) இணைக்கப்பட்டுள்ளதா ? | |

| | | | |
|---|---|---|---|
| | 3 | மனைப்பிரிவு அமையும் இடம் மற்றும் அணுகு வழிச்சாலை ஆகியவற்றிக்கான நில அளவு புத்தக வரைபடத்தின் (எப்.எம்.பி. நகல் இணைக்கப்பட்டுள்ளதா ?) | |
| | 4 | உள்ளாட்சி அதிகாரியின் 9 சான்றுகள் இணைக்கப் பட்டுள்ளதா ? | |
| | 5 | வட்டாட்சியரிடமிருந்து பெற்ற மூலச்சான்று இணைக்கப்பட்டுள்ளதா ? | |
| | 6 | இடம் ஊராட்சி பகுதியில் அமைந்தால் ஊராட்சி கட்டிட விதி 3(1) மற்றும் 3(4) –ன்படி மனுதாரரின் விண்ணப்பம் இணைக்கப்பட்டுள்ளதா ? | |
| | 7 | இடம் ஊராட்சி பகுதிக்குள் அமைந்தால் மனுதாரரால் அளிக்கப்பட வேண்டிய 5 உறுதி மொழிகள் இணைக்கப் பட்டுள்ளதா ? | |
| | 8 | மனைப்பிரிவு வரைபடம் 5 நகல்கள் இணைக்கப் பட்டுள்ளதா ? | |
| | 9 | சுற்றுசார்பு வரைபடம் 5 நகல்கள் இணைக்கப் பட்டுள்ளதா ? | |

| | | | |
|---|---|---|---|
| | 10 | மனைப்பிரிவு இடம் விரிவு அபிவிருத்தி திட்டப்பகுதியில் அமைந்தால் நகரமைப்பு அலுவலர் / நகரமைப்பு ஆய்வர் கையொப்பத்துடன் கூடிய விரிவு அபிவிருத்தி திட்ட வரைபட சுருக்க நகல் 3 இணைக்கப்பட்டுள்ளதா ? | |
| | 11 | மனைப்பிரிவு இடம் முழுமைத் திட்டப்பகுதியில் அமைந்தால் முழுமைத்திட்ட உத்தேச நில உபயோகங்கள் பற்றிய குறிப்பு மற்றும் முழுமைத் திட்ட சுருக்க வரைபட நகல் இணைக்கப் பட்டுள்ளதா ? | |
| | 12 | மனைப்பிரிவு இடத்தின் ஊடே உயர் குறைந்த அழுத்த மின் கம்பிப்பாதை அமைந்திருந்தால் அதனை மனுதாரர் தன் சொந்தச் செலவில் மனைப்பிரிவு சாலை வழியே மாற்றியமைப்பதாக ரூ.5/– முத்திரத்தாளில் எழுதி அத்தாட்சிகள் உடன் ஒப்பமிட்ட உறுதிமொழி இணைக்கப் பட்டுள்ளதா ? | |

| | | | |
|---|---|---|---|
| | 13 | மனைப்பிரிவு இடத்திற்கு அருகில் ஏரி, குளம்,ஓடை,வாய்க்கால், ஆறு அமைந்திருந்தால் அவற்றின் வெள்ளப் பெருக்கால் மனைப்பிரிவு இடத்தில் பாதிப்பு இல்லை என்பதற்கான பொதுப்பணி துறையின் / சம்பந்தப்பட்ட துறையின் சான்று இணைக்கப் பட்டுள்ளதா ? | |
| | 14 | உத்தேச சாலை அமைப்பினால் வாய்க்காலில் கால்வாயில் பாலங்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டால், சம்பந்தப்பட்ட துறையிடம் அனுமதி பெற்று மனுதாரரின் சொந்த செலவிலேயே பாலம் கட்டிக்கொள்வதாக ரூ.5/– முத்திரைத் தாளில் எழுதி மனுதாரர் கையொப்பமிட்ட உறுதிமொழி இணைக்கப் பட்டுள்ளதா ? | |
| | 15 | வில்லங்கமில்லை என்பதற்கான சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளதா ? | |
